ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2450/55 - 2025 අගෝස්තු මස 22 වැනි සිකුරාදා - 2025.08.22

2450/55 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/BD/LND/3/5/49.
காணி அமைச்சின் இல.: 4-3/9/2016/WS/516.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தின் பதுளை பிரதேச செயலகப் பிரிவின் ரில்பொல கோரளையின் இல. 78 B, பதுளை கிழக்கு (பிரிவு இல. 11, பதுளை மாநகர சபை எல்லைக்குள்) சுமனதிஸ்ஸகம கிராமத்தின், நில அளவையாளர் நாயகத்தினால் தயார் செய்யப்பட்ட நில அளவீட்டு வரைபட இல. 710224, துண்டு இல. 1 எனக் குறிப்பிடப்படும் 0.0127 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட கீழ் விபரிக்கப்படும் காணித் துண்டின் விபரங்கள் :

**01. துண்டு இல. 1**

காணியின் பெயர் : சுமனதிஸ்ஸகம; விபரம் : தோட்டம், தற்காலிக கலப்புப் பயிர் உண்டு; உரிமை கோருவோர் : தலைமை மதகுரு, முதியங்கனை ரஜ மஹா விகாரை, பதுளை; விஸ்தீரணம் : 0.0127 ஹெக்டயார்.

வடக்கு : இ.கி.வ. 112 இல் துண்டு இல. 02 (ஒரு பகுதி); கிழக்கு : இ.கி.வ. 112 இல் துண்டு இல. 02 (ஒரு பகுதி); தெற்கு : இ.கி.வ. 112 இல் துண்டு இல. 02 (ஒரு பகுதி); மேற்கு : இ.கி.வ. 112 இல் துண்டு இல. 02 (ஒரு பகுதி).

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக கீழே குறிப்பிடப் படும் திகதியில் அந்த காணித்துண்டிற்காக கீழே பரிந்துரைக்கப்பட்ட நேரத்திற்கு பதுளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| காணித்துண்டு இல. | பரிசீலனைத் திகதி | நேரம் |
|---|---|---|
| 1 | 2025.09.09 | மு.ப. 10.00 மணி |

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

துஷாரி அனுராதா நாணயக்கார,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பதுளை,
2025, ஓகத்து 01.

EOG 08 - 0249